ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ममापराधादपि नाम यद्ययं सुखीभवेत् सोऽपि ममात्यनुग्रहः ।
भावर्णवे दुःखनिरन्तरार्दितस्तपस्व्ययं विश्रममाप्नुयादिति ॥

"எனக்கு அபராதம் செய்தாவது ஒருவன் சுகப்படுவானேயாகில் அது எனக்கு பெரிய அனுக்ரஹமல்லவா! இந்தபவக்கடலில் பலவித துக்கங்களால் இடைவிடாது பீடிக்கப்பட்டவன் இந்தமாதிரி ஸமயத்திலாவது கொஞ்சநேரம் ச்ரமபரிஹாரத்தை அடைவானாகையால் எனக்கு அபசாரம் செய்து சுகப்படுவது பரமானுக்ரஹமென்பதில் சம்சயமில்லை" அனேகப்ராணிகளுக்கு வாஸஸ்தானமாகிய இந்த பூமண்டலத்தில் பிராணிகள் பரஸ்பரம் விரோதம் செய்துகொள்ளாமல் உதவிபுரிந்து உபகாரம் செய்தே தானும் சுகப்படலாம். பிறரையும் சுகப்படுத்தலாம். சில ஜந்துக்களுக்கு இந்த ஸ்வபாவம் வருகிறதே இல்லை. பிறருக்கு அபகாரம்செய்துஹிம்ஸித்தாற்றால்தான்நாம் சுகப்படலாமென்று குருட்டுத்தனமாக துர்வாஸனையால் நினைத்துக் கொள்கிறார்கள். அப்படியே நடவடிக்கைகளிலும் காட்டிவிடுகிறார்கள். இதேமாதிரி ஸ்வபாவமுள்ள மற்றொருவர் இதையறிந்தால் இப்படிச் செய்யும்படியாச்சுதா என்று ஆத்திரப்பட்டு அதேமாதிரி செய்யத் தலையிடுவார். அப்பொழுது பரஸ்பரம் கலஹம் செய்துகொண்டு கஷ்டப்படுவார்களேயன்றி கிஞ்சிற்றேனும் சுகப்பட வழியில்லை. ஸாதுக்களோவெனில் பிறர் தனக்குத்ரோஹம் செய்ய நினைத்தாலும் மனோவிகாரத்தை அடையமாட்டார்கள். நம் விஷயத்தில் துரோஹம் செய்வதால் சுகப்படுவதாக அவர்களுக்கு நினைப்பிருந்தால் அதன்படியே செய்து பார்க்கட்டும். சுகம் வந்தால் அதையும் அனுபவிக்கட்டும். அந்தப் பிராணிகளை வேறு விதத்தில் சுகப்படுத்த நம்மால் முடியாது, இப்படியாவது சுகப்படுவது நல்லதுதானே என்றுதான் நினைப்பார்கள். ஸம்ஸாரக்கடலில் சுகலேசம் கிடைக்காமல் கஷ்டப்படுகின்ற ஜந்துக்களுக்கு சிரமபரிஹாரம் செய்துகொள்ளும் சமயம் நேருவதில்லை. பரத்ரோஹ சிந்தை, பராபகாரம் செய்தல், பிறரை ஹிம்சித்தல் முதலியவைகளைச் செய்து சுகப்படுவோம் என்று நினைக்கும் சமயத்திலாவது கொஞ்சம்சிரம பரிஹாரத்திற்கு இடங்கிடைத்தால் ஆசுவாஸத்தை அடைவார்களல்லவா! அப்படியாவது ஆசுவாசத்தையடையட்டும். அதுவே நமக்கு பெரிய அனுக்ரஹம் என்று நினைப்பார்கள். இதுதான் ஸாத்விகர்களான ஸாதுக்களின் ஸ்வபாவம். இந்த உத்தமஸ்வபாவமே எல்லோருக்குமிருக்குமாயின் ஜனங்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்பட்டு சண்டை சச்சரவுநேர இடமில்லை, அதனால் எல்லோரும் ஒற்றுமைப்பட்டு வாழ்வார்கள். ஸுகத்தை அடைவார்கள். ஆகையால் எல்லோரும் இந்த உத்தம சாந்த ஸ்வபாவத்தை அடைந்து சுகப்படுவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்

# உலகத்தாரே உற்ற குரு.

आचार्यः सर्वचेष्टासु लोक एव हि धीमताम् ।

"புத்திமான்களுக்கு ஸர்வசேஷ்டைகளிலும் உலகமே ஆசாரியனும்" என்றார் வாக்படர். இது புத்திசாலிகளின் அனுபவத்திற்கொத்ததே. ஆசாரியனுயுள்ளவன் சிஷ்யஹிதத்திற்காக நீண்ட காலத்தால் சுருதி யுக்தி ஸ்வானுபவங்களைக் கொண்டு கண்டு பிடிக்கப்பட்ட இரஹஸ்யங்களையும் சொல்லிவிடுவார்கள். அங்ஙனமே ஸ்ரீமத்பாகவதத்தில்,

ब्रूयुः स्निग्धस्य शिष्यस्य गुरवो गुह्यमप्युत ।

"அன்புள்ள சிஷ்யனுக்கு ஸத்குருக்கள் இரஹஸ்யார்த்தங்களையும் சொல்லுவார்கள்" என்று கூறப்பட்டது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் ஓரோர் ரஹஸ்யத்தை குருவினிடமிருந்து தெரிந்துகொண்டு சிஷ்யன் ஸர்வக்ஞனுய்விடுவதுபோல புத்திமானுயுள்ளவன் உலகத்தார் ஒவ்வொருவரிடத்திலுமே ஒவ்வோர் நல்ல குணத்தைத் தெரிந்துகொண்டு நிபுணனுய்விடலாம். ஒவ்வொரு மனிதனிடத்திலும் புத்திமானுக்கு நல்ல குணமே புலப்படும். புத்திஹீனனுக்கு துர்குணமே புலப்படும். தர்மபுத்திராதிகளுடையவும் துர்யோதனுதிகளுடையவும் புத்திசக்தியைப் பரீக்ஷிப்பதற்கு பீஷ்மாசாரியர் முதலாயினேர் பாண்டவர்களிடம் உலகத்தில் துர்ஜனர்களை யெல்லாம் கணக்கிட்டு வரும்படிக்கும் துர்யோதனுதிகளிடம் ஸஜ்ஜனர்களையெல்லாம் கணக்கிட்டு வரும்படிக்கும் சொல்லி அனுப்பினர்கள். பாண்டவர்கள் உலகமெல்லாம் ஸஞ்சரித்து துர்ஜனன் ஒருவனும் இல்லை என்று வந்தார்கள். துர்யோதனுதிகளோவெனில் ஸஜ்ஜனன் ஒருவனுமில்லை என்று வந்தார்கள். இதில் எது உண்மையாயிருக்கலாமெனில் ஸாதுக்களுக்கு ஸர்வ ஜனங்களும் ஸஜ்ஜனங்களென்பதுதான் உண்மை. ஸாதுக்கள்

ஒவ்வொருவனிடமிருந்தும் ஒவ்வொரு நல்ல குணத்தைக் கிரஹித்துக்கொண்டிருப்பார்களாகையால் உலகமே குருவெனக் கருதுவார்கள். மனுஷ்யர்களிடமிருந்துமாத்திரம் குணங்களை ஸாத்துவிகர்கள் கிரஹித்துக்கொள்வார்களென்பதில்லை, திர்யக் ஜந்துக்களிடமிருந்தும் குணங்களைக் கிரஹிப்பார்கள். இது ஸ்ரீபாகவதம் 11-வது ஸ்கந்தத்தில் பிரஸித்தம். நீதிநூல்களிலும் இது பிரசித்தமாயுள்ளது. சிறுவர்களும் இதைச் செவ்வனே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். எப்படியெனில் காக்கை, கொக்கு, கோழி முதலிய ஜந்துக்களிடமிருந்தும் சில சில குணங்களை அப்பியஸித்துத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று கூறப்படுகின்றது. அங்ஙனமே.

सिंहादेकं बकादेकं षट्शुन स्त्रींश्चगर्दभात् ।
वायसाच्चतुरश्शिक्षेत्तथा कुक्कुटजातितः ॥

"சிங்கத்தினிடமிருந்து ஒரு குணத்தையும், கொக்கினிடமிருந்து ஒரு குணத்தையும், கழுதையினிடமிருந்து மூன்று குணங்களையும் காக்கையினிடமிருந்து நான்குகுணங்களையும், அப்படியே கோழியினிடமிருந்து நான்கு குணங்களையும் அப்பியஸித்துக்கொள்ள வேண்டும்" என்று நீதிநூல் கூறுகின்றது. ஸ்தாவர ப்ராணிகளிடத்திலிருந்தும் பல நல்ல குணங்கள் தெரிந்துகொள்ளவேண்டியதுண்டு. தான் கஷ்டப்பட்டாலும் பரோபகாரம் செய்யவேண்டுமென்றதை விருக்ஷாதிகளிடமிருந்து தெரிந்துகொள்ளலாம். தாரித்திரியம் முதலிய தாழ்ந்த குணத்திலிருந்தும் புத்திமான் கெவனிக்கவேண்டியதுண்டு. அதாவது:—

दारिद्र्यस्यातिवात्सल्यं किं ब्रवीमि नराधिप ।
आत्मनाशमनादृत्य भवन्तं मा मदर्शयत् ॥

"ஹே! மஹாராஜ!! என் தாரித்திரியத்தின் பேரன்பை என்னவென்றுரைப்பேன். தன்னுடைய நாசத்தைக்கூட லக்ஷியம் செய்யாமல் எனக்குத் தங்களைக் காண்பிவித்ததே" என்றார் ஓர் கவி. இதிலிருந்து தான் கஷ்டப்பட்டாலும் பரோபகாரம் செய்வதே பெரிதெனத் தெரிந்தது இப்படியே ஒவ்வொரு வஸ்துவிலிருந்தும் புத்திமான் குணத்தைக் கிரஹித்துக்கொண்டு ஸகல சிரேயஸ்ஸையும் அடைவானாக.

சுபம்.

பத்திராதிபர்.

# ஓர் ஸம்பாஷணே.

கோவிந்தன் மிகுந்த ஸந்தோஷத்துடன் உல்லாசமாய் வருகிறான். அவனேக்கண்டு முகுந்தன் கேழ்க்கிறான். ஹே! கோவிந்த! மிகுந்த ஸந்தோஷ ஆரவாரத்துடன் காணப்படுகிறாய்? என்ன இவ்வளவு ஸந்தோஷத்திற்குக் காரணம். எங்கிருந்து வருகிறாய்?

கோவிந்தன்:— முகுந்தா! வாராஹபுரியிலிருந்து வருகிறேன. அங்கு பார்த்தாமனாகிய ஸ்ரீவெங்கடேசனுடைய ஸந்நிதியில் ஸ்ரீராம நவமி புண்யகால ப்ரயுக்தமான பரமோத்ஸவம், பரம பக்திப்ரேமா வேசத்துடன்பிரம்மானந்தமாய் நடத்தப்பட்டுவருகிறது. அதைக் கண்டு மிகவும் ஸந்தோஷப்பட்டேன். மனிதனாய்ப் பிறந்தால் வாரகபுரி சென்று பரமாத்மாவை ஸேவித்தாற்றான் ஜன்மஸாபல்ய முண்டு. இக் கலியிலும் ப்ரத்யக்ஷதைவமாகப் பகவானே விளங் குகிறார். தர்சித்தவருக்குக் கைமேல் பலம் காணப்படுகிறது.

முகுந்தன்:— என்ன ரொம்ப ரொம்ப வர்ணிக்கிறாயே. இக் காலத்தில் இப்படிச்சொல்லும் கட்டுப்பெட்டி உன்னே ஒருவனேத் தான் கண்டேன். நாகரீகம் பெருத்த இந்நாளில் தைவமென்றும் கோவிலென்றும் குளமென்றும் பிறர்களே ஏமாற்றிப் பிழைக்க எண்ணிய ஓர் சாரார்கொண்ட மோசக்கருத்தல்லவா இது.

கோவிந்தன்:—நேசனே அப்படிச் சொல்லுவது ஸரியன்று, நாஸ்திகவாதம் பேசுபவர்களின் தலைவரோடு பேசியிருக்கிறேன். கடைசிமுடிவில் அவர்களும் தனக்கும் தெரியாத ஏதோ காரணத் தால் கார்யங்கள் நடைபெறுகின்றன என்று அங்கீகரிக்கின் றார்கள். தைவம், கடவுள், ஈச்வரன் என்பதாதி சப்தங்களால் அந்தக்காரண வஸ்துவைச் சொன்னால் அதைக் கேழ்க்க அவர் கள் ஸகிக்கிறதில்லேயேதவிர ஏதோ ஒரு காரணவஸ்து என்று மாத்திரம் சொல்லுகிறார்கள். அதைத்தான் நாம் ஈச்வராதி சப்தங் களால் கூறுகிறோம். இந்த சப்தங்களில் த்வேஷமிருக்குமாயின் வேறு எந்த சப்தங்களால் வ்யவஹரித்தாலும் ஸரியே வஸ்து ஒன்று இருப்பது என்பது சத்தியம். ஆகவே நாஸ்திகவாதம் புரிபவர்தான் பிழைக்கும்வழியாக இந்த நாகரீகவாதத்தை சரண மடைந்தார்கள். அதனால் அவர்கள் கொண்ட கருத்தேதான்

மோசக்கருத்தேயன்றிநம் ஸனாதனிகளின் கருத்து ஒழுங்கானதே.

முகுந்தன்:— வாஸ்தவந்தான். இந்த உண்மை உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கிறதோ என்பதை பரீக்ஷிக்கின்றதற்காகத் தான் இந்த ப்ரஸ்தாவத்தைக் கிளப்பினேன். இருக்கட்டும். நல்ல ஸந்தோஷஸமயத்தில் ஆஸுரப்ப்ரக்ருதிகளின் பேச்சு வேண்டாம். அந்த வாரகபுரி என்பது எங்கு இருக்கிறது. அந்த ஸ்தலத்தின் வைபவமென்ன? அங்கு எந்தபெரியார் வஸித்துவந்தார்? மற்ற ஸ்தலங்களைவிட அந்த ஸ்தலத்துக்கு என்ன விசேஷம்? ப்ரத்யக்ஷ தைவமென்றுயே என்ன ப்ரத்யக்ஷபலன் கிடைக்கிறது என்பதாதி இந்தவிஷயங்களை விஸ்தாரமாய்ச் சொல்ல வேண்டும்.

கோவிந்தன்:— அந்த வாரகபுரி என்ற ஸ்தலம் தஞ்சாவூர் தாலுக்காவில் பஞ்சனத (திருவையார்) க்ஷேத்திரத்திற்கு மேற்றிசையில் சுமார் 8-மைல் தூரத்தில் காவேரிதீரத்தில் உள்ளது. அது முன் சிலநாளில் பூபதிராஜபுரமென்று வழங்கப்பட்டுவந்ததாம். தற்பொழுது வாகூர் என்று வ்யவகரித்துவருகிறார்கள். அதில் தென்னாட்டை ஆண்ட மழவ ராஜன் மழையில்லாமல் ராஜ்யம் பரிதபிக்கும்போது வடநாட்டிலிருந்து சில உத்தமபிராம்மணர்களை "மழைக்காகவே" வரவழைத்தான். அவர்கள் வரும் பொழுதே வேண்டியவரை தாராளமாய் மழை பொழிந்து ராஜ்யம் ஸுபிக்ஷமாயிற்று. அந்த பிராமணர்கள் தற்பொழுது மழவநாட்டார். (மழநாட்டுப்ருஹச்சரணம்) என்று அரசனாலேயே கொண்டாடப்பட்டு இப்பொழுதுமப்படியே வியவஹரிக்கப்பட்டு வருகிறார்கள். அந்தவகுப்பார் குடியேறின ப்ராசீனமான அக்கிரஹாரமது. அந்த க்ஷேத்திரத்தில் வஸிக்கும் அந்தணர்கள் பரந்தாமனை பரமாத்மா ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேச்வரஸ்வாமி அனுக்ரஹத்தால் அந்த பரந்தாமனே பரமகதி என்று அன்றுமுதலின்று வரை உத்ஸவாதிகாலங்களில் ஸ்வாமி வெளியில் எழுந்தருளும் போது ஸ்வாமியைத் தூக்குவதும், குடைபிடிப்பதும், தீவிட்டி பிடிப்பதும், தீவட்டிக்கெண்ணை போடுவதும் இதுபோன்ற ஸகல விதமான கைங்கர்யங்களையும் போராதாவுடன் செய்து இஷ்ட சித்தியைப்பெற்றுவருகிறார்கள். இதர கிராமங்களிலுள்ள தேவ

ஆலயங்களைவிட இந்தஸ்தலத்தில் இந்த விசேஷம் பாராட்டத் தகுந்தது. இந்த ஸம்ப்ரதாயத்தில் சிலவற்றை அக்கம் பக்கம் கிராமவாஸிகளும் கையாண்டுவருகிறார்கள், இந்த ஸ்தலத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முந்தி மகா பண்டிதோத்தமரும் ஸந்நியாஸாச்ரமம் ஸ்வீகரித்தவருமான நாராயணதீர்த்தஸ்வாமி என்னும் மஹான் ப்ரம்மத்யான நிஷ்டைக்காகவே பகவானது திருவுள்ளத்தின்ப்ரகாரம் அந்தக் கிராமத்தில் வஸித்துவந்தார். ஸங்கீத நிபுணர்களும் ரஸிக்கும்படியாக ஸ்ரீபாகவதத்தின் ஸாராம்சத்தைத் தரங்கமென்னும் கீர்த்தனைகளாகச் செய்து அருளியிருக்கிறார். உத்ஸவ ஸம்ப்ரதாயங்களில் தரங்க கீர்த்தனம் பாடப்படாதயிடம் கிடையாது. அந்த மஹான் பகவத்ஸான்னித்யம் மிகப் பெருகி வரும்படி அந்த மூர்த்தி விசேஷத்தில் சக்திவிசேஷாவிர்ப்பாவத்தைப் ப்ரகாசப்படுத்தியிருக்கிறார்.

முகுந்தன்:—ஓ! ஓ!! அந்தமஹானா அங்கு வஸித்துவந்தவர். அவருடைய பூர்வ சரித்திரங்களை வெகுவாய்க் கேட்டிருக்கிறேன். அம் மஹான் பூர்வம் கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும்போது தன்னுடைய தர்மபத்னி பிறந்த வீட்டிற்குப்போயிருக்கையில் ஒருநாள் அவளுடன் சேரக்கருதி இரவில் ஒருயாமத்திற்குமேல் தன் கிருஹத்தைவிட்டுக் கிளம்பி நான்கு ஆறுகளுக்கு அப்பாலிருக்கும் அந்த மாமனார் ஊர் போவதாக நினைத்து வேகமாய் மூன்று ஆறுகளையும் தாண்டி நான்காவது ஆற்றில் கை சளைத்து பிராணபயம் வந்துவிடுமோவென்ற தருணத்தில் அல்ப்ப ஸுகத்திற்காக அரியதோர் ஜன்மமே பாழாய்விடுகிறதே. ப்ரேஷோச்சாரணம்செய்து நான்காவது ஆச்ரமத்தில் புகுந்து தர்மாணதோஷத்தை விலக்கிக் கொள்வோமெனத் தீர்மானித்து ப்ரேஷோச்சாரணம் செய்து பூநூலையும் அறுத்து சிகையிலும் சிலவற்றைப் பிடுங்கி எறிந்தார். உடனே கைக்கு ஓர் அவலம்பம் கிடைத்தது. அதைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் ஆச்வாஸம்பண்ணிக்கொண்டவராய் அக்கரை எவ்வளவுதூரம் இருக்கிறது என்று பார்க்கும்பொழுது கொஞ்ச தூரந்தான் இருப்பதாகக் கண்டு ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அக்கரைவந்து சேர்ந்தார்.

बलवानिन्द्रियग्रामो विद्वांसमपि कर्षति ।

பலிஷ்டமான இந்திரியக் கூட்டம் வித்வானையும் விஷயத்தில் இழுத்துவிடும், என்றரீதியாய் அவர்மனதும் கலந்து விஷயத்தில்

ஈடுபட்டு மாமனர் வீட்டையே அடைந்தார். அங்குவந்து கதவை திறக்கச்சொல்ல மாமனர் முதலியவர்களால் வாவேர்க்கப்பட்டு ஏதோ ஒரு வியாஜம்சொல்லி வேறு ஒரு பூநூலையும் வாங்கிப் போட்டுக்கொண்டு உலர்ந்த வேஷ்டியுந் தரித்துத் தாம்பூலமருந்தி சயனகிருஹம் சென்ருர்.பெற்றோரால் அனுப்பப்பட்டதனது தர்மபத்னிவந்துபார்க்கையில் காஷாயந்தரித்த ஸன்யாஸியாகவே புலப்பட்டார். யாரோ ஸன்யாஸியல்லவா வந்திருக்கிருர் என்று சொல்லிக்கொண்டு அந்தப் பெண்மணி வெளிப்பட்டுவருகையில் அவரது மாமனுரும் மாமியாரும் ஏதோ ஒரு ஸாமானைப்பார்ப்பது போல் அந்தஉள்ளேவந்துபார்த்து மாப்பிளைதான் என்று நினைத்து திருப்பியனுப்ப மறுபடியும் அத்தப்பெண்மணி வந்துபார்க்கையில் ஸந்நியாஸியாகவே புலப்பட்டார். இப்படி இரண்டு மூன்றுதடவை யாகவே பிறகு இவர் மாமனுரைக் கூப்பிட்டுக் கேழ்க்கையில் அந்தப் பெண் தங்களை ஸன்யாஸி என்று சொல்வதாகச் சொன் ஞர். அதைக்கேட்டவுடன் மிகவும் மனம் பரிதபித்து அந்தோ! என்னமோஹம்? காமவெரிபிடித்துக் காலன்வசமாகி காலஸூத் ராதி நாகத்திற்கு ஆளாகத் துணிந்துவிட்டோமே! என்ன படித்தி ருந்தும் என் அறிவு குன்றிவிட்டதே! நம் பூர்வபுருஷர்களுடைய பாக்கியவசத்தாலன்ரு தர்ம தேவதை நம்மைக் காப்பாற்ற எண்ணி அந்தப் பெண்மணியின் கண்ணில் ஸன்யாஸியாகத் தோற்றவைத்தது. மகா பண்டிதனெனப் பெயர்வாங்கிய என் புத்தியே பாபத்திற்குத் துணிந்துவிடும்பொழுது பாமரர்களின் புத்தி ஆ! அப்படியாய்விடுமென்பதற்குக்கேழ்க்கவும்வேண்டுமோ? "ஆஸ்திகனுயிருந்தாலும் காமுகனுய்விட்டால் கடும் பாபத்திற்குத் துணிந்துவிடுவான்'' என்று சாஸ்திரக்காரர்கள் எழுதியது அனுப வத்திற்கு வந்துவிட்டதுஎன்று பலவிதமாகப் ப்ச்சாத்தாபப்பட்டு மாமனுரிடம் உண்மையை வெளிப்படச் சொல்லிவிட்டு உடனே ஒரு பெரியோரை அடைந்து கிரமமாக ஸன்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து நாராயணதீர்த்தர் என்று யோகபட்டந்தரித்து கிரா மைகாத்திரமாய் ஸஞ்சரித்துக்கொண்டு நடுக்காவேரி என்னும் ஊரில் விநாயகருடைய ஆலயத்தில் ஒருநாளிரவு தங்கினர். हिमगिरितनयातनयं என்ற விநாயக ப்ரார்த்தனுச்லோகமும் அம் மஹானுல் சொல்லப்பட்டது. பகவத் தியானநிஷ்டைக்குத்தகுந்த இடம் எது என்றகவலையுடன் அங்கு சயனித்துக்கொண்டார்.

காலையில் கண்ணில்படும் பிராணி போகிற வழியே சென்றால் தியான நிஷ்டைக்குத்தகுந்த இடம் கிடைக்கும் என்று ஸ்வாமி ஸ்வப்பனத்தில் போதிப்பித்தார். உடனே விழித்துக்கொண்டு எழுந்து வெளிவந்து பார்க்கையில் வராகம் (அதாவது பன்றி) ஒன்று கண்ணில் தென்பட்டது. உடனே அது போகத்துடங் கிற்று. அதன் பின்தொடர்ந்தே இம் மகானும் சென்றார். அந்த வராகம் இந்த பூபதிராஜபுரம் என்னும் வரகூரில்வந்து மறைந்து விட்டது. ஸ்வப்பனத்தில் பகவான் போதித்த இடம் இதுதான் என்று தீர்மானித்துக்கொண்டு அந்த நாராயணதீர்த்தஸ்வாமி களும் அங்கேயே வஸித்துத் தியான நிஷ்டை செய்துவந்தார். வராஹபுரி என்னும் பெயரை அதுமுதல் வழங்கச்செய்தார்.

கோவிந்தன்:— ஆச்சரியம்! ஆச்சரியம்!! உன்னிடமிருந்து அரிய விஷயங்களை எல்லாம் தெரிந்துகொண்டேன். மிகவும் ஸந்தோஷம். அந்த நாராயணதீர்த்தஸ்வாமிகள் அவர்களுக்கு முந்தியும் அவர்கள் நாளிலும் அதற்குப் பிறகு இதுவரையிலும் அந்த க்ஷேத்திரத்தில் பகவான் திவ்யலீலைகளைச் செய்துவருகிறார். பிராமணோத்தமர்களும் ஸகல கைங்கர்யங்களையும் தாமேசெய்து கொண்டு பகவானை ஆராதித்துவருகிறார்கள்.

முகுந்தன்:— தீவிட்டி பிடிப்பதும் எண்ணை போடுவதும் இழி வானகார்யமல்லவா. இவ்வித கார்யங்களைச் செய்ய பிராம்மணர் கள் எப்படித் துணிகிறார்கள்.

கோவிந்தன்:— அப்படி மற்றவர்கள் நினைப்பார்கள். அந்த கிராமவாஸிகள் அதை பெருமை என்றே நினைக்கிறார்கள். ஒரு கைங்கர்யத்தைச் செய்துவந்த குடும்பத்தில் பின் வார்ஸுகள் இருக்கும்பக்ஷத்தில் அந்த கைங்கர்யம் மற்றவர்களுக்கு வேண்டு மென்றாலும் கிடைப்பது அரிது. அதனால் திருஷ்டமாகவே அனேக பலன்களை அவர்கள் அடைந்திருப்பதுதான் அந்த கைங் கர்யம் விடாமலிருப்பதற்குக் காரணம். அன்றியும் கிராமாந்தர வாஸிகளும் பலவிதமான பலனைக்குறித்து பிரார்த்தனைகளைசெய்து கொண்டு அங்குவந்து செலுத்தி பகவத் ப்ரஸாதம் பெற்றுக் கொண்டுபோவதும் ப்ரத்யக்ஷ தைவமென்பதை நன்றாய் விளக்கு கிறது. ஒருவன் பகவத் ஸன்னிதியில் தினந்தோறும் ஒரு விளக் குப் போடுவதற்குள்ள எண்ணை கொடுத்துவிடுவதாக வேண்டிக்

கொண்டு வெகுநாள் நடத்திவந்தான். ஒருஸமயத்தில் அந்திமா திரி எண்ணை கொடுப்பதை நிறுத்திவிட்டான். சிறிதுகாலம் கழித்து தர்சனத்திற்காக வந்தான். பகவானைத் தர்சித்துவிட்டு ப்ரதக்ஷிணம் செய்துவருகையில் கண்களிரண்டும் திடீரெனத் தெரியாமல்போய்விட்டது. இதென்ன கஷ்டம் கண் தெரியவில்லையே என்று கதரும்போது ஒருவன்மீது ஆவேசம்வந்து என் ஸன்னிதியில் ப்ரகாசத்தைக் குறைத்தாய் நானும் உன் கண்ணின் ப்ரகாசத்தைக் குறைத்தேன். என் ஸன்னிதியில் முன்போல் ப்ரகாசம் போட்டால் உன் கண்ணும் ப்ரகாசிக்கும் என்று ஸ்வாமி ஸாதித்தார். அப்படியே செய்கிறேனென்று ப்ரார்த்தித்துக்கொண்டதின்பேரில் உடனே அவன் கண் நன்றாய் தெரிந்துவிட்டது. இதுவும் ஸ்வாமி ப்ரத்யக்ஷ தைவமென்பதற்கு ஓர் அத்தாக்ஷியாம். இதுபோல் கணக்கற்ற திவ்ய சரித்திரங்கள் உண்டு. ராஜாங்க ஸ்தானங்களிலும் இது ப்ரத்யக்ஷ தைவமென்பதற்குப் பல ருஜுக்கள் உண்டு. அந்த விசேஷங்களைப் பத்திரிகைகளில் படித்தவர்கள் படித்துத் தெரிந்துகொண்டிருப்பார்கள். ஆதலால் அது மீண்டும் இங்கு எழுதப்படவில்லை. கோகுலாஷ்டமி மஹோத்ஸவத்தில் உரியடித் திருநாளைப் போய் தர்சித்தவருக்குப் பகவான் ப்ரத்யக்ஷமாய் யிருக்கின்றாரென்பது புலப்படாமலிருக்காது. அதன் வைபவத்தையின்னொரு ஸமயம் தெரிவிக்கிறேன். இப்பொழுது பகவானைத் தர்சிக்கப்போவோம் வா என்று இரண்டுபேர்களும் பகவானைத் தர்சிக்கச் சென்றார்கள்.

சுந்தரேசன்.

---

# ஸ்ரீ நடேசஸ்துதி.

(248-வது பக்கத்தொடர்ச்சி)

नृत्यन्नित्यमभिव्यनक्ति परमानन्दस्वरूपं निजं
कर्षन्मानसमानतस्य परमप्रेमास्पदत्वं तथा ।
शक्त्यैकासनगो व्यनक्ति शिवया ध्येयत्वमप्यात्मनः
तस्मै श्रीनटमूर्तये नमइदं श्रीदक्षिणामूर्तये ॥९७॥

எந்தநீர் எப்பொழுதும்நர்த்தனம்செய்துகொண்டு ஸர்வோத்தமமான ஆனந்த ஸ்வரூபத்தை பிரகாசிக்கின்றீரோ, வணங்கின

ஜனங்களுடைய மனஸை ஆகர்ஷணம் செய்துகொண்டு பாதேவியின் ஏகாஸனத்திலிருந்துகொண்டு சக்தியுடன் கூடியே தன்னை தியானம்செய்யவேணும் என்ற அர்த்தத்தையும் பிரகாசிக்கின்றீரோ. அவ்விதமான தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபியான நடமூர்த்தியின்பொருட்டு நமஸ்காரம்.

नित्यानन्दनिरञ्जनामृतपरज्ञानानुभूत्या सदा
नृत्यन्तं परमेश्वरं पशुपतिं भक्त्यैकलभ्यं परम् ॥

என்ற ஸூத ஸம்ஹிதை முக்திகண்ட வசனத்தினாலும்,

स्वस्वरूपानुसन्धानात् नृत्यन्तं सर्वसाक्षिणम् ।
मुहूर्तंचिन्तयेत् मां यः सर्वबन्धैः प्रमुच्यते ॥

என்ற வராஹ உபநிஷத் வசனத்தினாலும்.

तत्वोपदेष्टारमिह त्रिलोचनं नित्यं बृहन्तं सुखबोधसद्मनम् ।
अरूपिणं वाङ्मनसातिगामिनं नृत्यन्तमीडे हृदि दक्षिणाननम् ॥

என்ற குருஞான வாஸிஷ்ட மங்கள சுலோகத்தினாலும், ஸ்வரூபானந்தானுஸந்தானமே ஈசனுடைய நடனமாம், தக்ஷிண திக்குக்கு அறிமுகமான முகத்தை உடையவராயிருத்தலும், மாயா சக்தியினாலே ஸிருஷ்டிஸ்திதி ஸம்ஹார ரசனைகளில் தக்ஷிணராயும் (அதாவது)ஸமர்த்தராயும் பரமார்த்தத்தினாலே சுருதிகளில் சொல்லியபடி அமூர்த்தியாயும், (அதாவது) சரீரமில்லாதவராய் இருத்தலாலும்.

परमाद्वैतविज्ञानं कृपया वै ददातियः ।
सोऽयं गुरुर्गुरुस्साक्षात् शिवएव नसंशयः ॥

என்பதாதி சாஸ்த்ர வசன ஸமூஹத்தாலும், டமருஹஸ்தத்தால் சின்முத்திரையைப் போதிப்பதாலும் ஸ்ரீநடேச மூர்த்தியே தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாம். (97)

सृष्ट्वा सर्वमिदं जगद्विजयतेऽप्याविश्य मायी विभू
रक्षन्नक्षसमुत्थबोधमखिलं चाध्यक्षयन्यः प्रभुः ।
संसृत्यब्धिनिमग्नसर्वजनताह्वानार्थढक्काध्वनि
स्तस्मैश्रीनटमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥९८॥

எந்தப் பிரபுவானவர் அகில ஜகத்துக்களையும் சிருஷ்டிசெய்து மாயாரூபியாக சரீரத்தில் பிரவேசித்து இந்திரியங்களினுலுண்டான ஞானங்களில் ஸாக்ஷிபூதராயிருந்துகொண்டு ஸம்ஸாரஸமுத்திரத்தில் மூழ்கின ஜனங்களைக் கூப்பிடும்பொருட்டு டக்கா நாதத்தையுடையவராகவும் பிரகாசிக்கின்றுரோ, அந்த தக்ஷிணுமூர்த்திஸ்வரூபியான ஸ்ரீநடேசமூர்த்தியின் பொருட்டு நமஸ்காரம் (98)

द्रष्टुर्नैवास्ति दृष्टेः कथमपि विरहो यस्य विज्ञानमूर्तेः
द्रष्टानैवास्ति यस्माज्जगति जननभागात्मरूपात्परेशात् ।
नृत्यन्नात्मैक्यबोधं कलयति करुणावार्धिरानन्दमुद्रः
देयात्कैवल्यमुक्तिं सपदि स भगवान् दक्षिणाशामुखो नः ॥९९॥

பார்க்கிற ஜனத்தினுடைய பார்வைக்கு ஞானரூபியான யாதொரு ஞாநாகார பகவானுக்கு ஒருவிதத்திலும் நாசமில்லையோ, ஆத்ம ஸ்வரூபியான எந்த பரமேச்வரனைக்காட்டிலும் பார்க்கிற ஜனமானது வேறு இல்லையோ, ஆனந்தசின்முத்திரையைத் தரித்துக்கொண்டு நர்த்தனம் செய்து ஸகல வேதாந்தார்த்தமான ஜீவ பிரும்மைக்யபோதத்தை எவர் போதிக்கின்றுரோ, அந்த தக்ஷிணுபிமுக மூர்த்தியான நடராஜ மூர்த்தி விதேஹகைவல்யத்தைக் கொடுக்கவேணும். (99)

यत्तत्वावबोधजातं जगति जनिमता दृश्यते दृश्यजातम्
तत्वे बुद्धे यदीये व्रजति च सहसाऽदृश्यतां कारणेन ।
तत्त्वज्ञानभाजामभयमपि करात्द्योतयन्द्योतते यः
दिव्यात्कैवल्यमुक्तिं सपदि स भगवान् दक्षिणाशामुखो नः ॥

உலகில் பிராணிகளுக்கு எந்த தத்வார்த்தத்தைத் தெரிந்துகொள்ளாததினுலே ஸுகதுக்க மிச்ரமான இந்த ப்ரபஞ்சமானது தோன்றுகிறதோ, எந்த தத்வக்ஞானத்தினுலே பிரபஞ்சமானது காரணபூதமான அக்ஞானத்தோடு லயிக்கின்றதோ அந்த தத்வார்த்தத்தை அடைந்த ஜனங்களுக்கு தன்னுடைய ஹஸ்த்த கமலத்தால் அபயபிரதானம்செய்து எவர் பிரகாசிக்கின்றுரோ, அந்த தக்ஷிணுபிமுகரான நடராஜமூர்த்தியானவர் விதேக முக்தியை கொடுக்கவேணும், தக்ஷிணுபிமுகமாய் இருப்பதால் ஸகல ஜனங்களுடைய துக்கங்களுக்கு காரணபூதமான அக்ஞானரூபமான

மிருத்யுவை பக்தர்களுக்கு நிவர்த்திசெய்கிறேன் என்பதை போதிக்கின்றார். ஸ்ரீ அப்பய தீக்ஷிதமகான்களும் அபயப்பிரதானமகிமையை ஸ்துதித்து இருக்கிறார்கள்.

निजपदलोकने सति नृणामितरैः
सुकृतैरलमिति बोधं अथधियाऽभयमुद्रिकया ।
कनकसभा विभासि करवैपुरवैरिमहः
स्थिरभवरोगदारि करुणाभरणं शरणम् ॥

தன்னுடைய குஞ்சிதசரண தரிசனமானது ஏற்பட்டபொழுது வேறு யாதொரு புண்யகர்மாவும் வேண்டாம் என்கிற அர்த்தத்தைத் தெரிவிக்கிறாரோ என்று ஊகிக்கத் தகுந்த நிஜமாக ஸம்ஸார அபயத்தைப் போதிக்கின்ற அபயமுக்திரையை தரிக்கின்றதும் ஸ்ரீ சிதம்பர கனகஸபையில் பிரகாசிக்கின்றதும் கருணையே ஆபரணமாக உடையதுமான திரிபுரஸம்ஹாரியான பரமசிவனுடைய மகஸ்ஸைசரணம் அடைகின்றேன். (100)

श्रीमद्धर्मसभोज्वलं मुनिवरैर्ध्येयं प्रभुं सर्वगं
श्रुत्या नेति निषिध्य दृश्यमखिलं संसूच्यमानं परम् ।
स्तंभाकारसमस्तवेदाविनुतं प्रज्ञानरूपं शिवं
विज्ञानाय विभावयामि हृदये ह्यज्ञानविध्वंसकम् ॥१०१॥

ஸுவர்ணஸபையில் பிரகாசிக்கின்றவரும், மஹர்ஷிகளால் தியானம் செய்யத்தகுந்தவரும், வியாபகரும், பிரபுவும் வேதத்தால் இல்லை இல்லையென்று திருச்ய பிரபஞ்சத்தை நிஷேதம்செய்து ஸூசிக்கப்பட்டவரும், ஸ்ரீசித்ஸபையில் ஸ்தம்ப ரூபங்களான வேதங்களால் ஸ்துதிக்கப்பட்டுவரும் ஞான ரூபியும் அக்ஞானத்தை நாசம்செய்கிறவருமான நடராஜமூர்த்தியை அ[illegible]வைத ஞானவிர்ப்பாவத்தின் பொருட்டு ஹிருதயத்தில் தியானம் செய்கின்றேன். (101)

मिथ्याज्ञानसमाह्वया जवनिका यद्रूपसंगूहनं
तन्वानापि निवार्यते मखिवरैराचार्य भावं गतैः ।
श्रीमत्सांबसभानटांघ्रियजनस्यान्तेऽन्वहं त्रिः स्वयं
तेजस्तद्धृदि भावयामि जननध्वंसाय भक्त्या निशम् ॥१०२॥

மித்தியாஞானமென்று பெயருள்ள திரையானது எந்த பரமாத்ம ஸ்வரூபத்தை மறைப்பதாய் இருந்தபோதிலும் ஆசார்யபாவத்தை

அடைந்ததீக்ஷிதர்கள் தினந்தோறும் சித்ஸபேசனுடைய ஒவ்வொரு காலபூஜையினுடைய முடிவில் பிராணிகளுடைய கருணையினாலே பிரதி பிரயோஜனத்தை விரும்பாமல் அக்ஞான திரையை நிவர்த்திசெய்து பரமாத்ம தேஜஸ்ஸை அறியச்செய்கிறார்களோ அந்த தேஜஸ்ஸை ஜன்மநாசத்தின்பொருட்டு பக்தியினாலே எப்பொழுதும் தியானம் செய்கின்றேன். இந்த ஸ்துதியால் சிதம்பரம் நடராஜருடையபூஜையில் ஆறுகாலங்களிலும் தர்மார்த்தமாக ரகஸ்யதெரிசனம்செய்விக்கிறமுறையை போதித்திருக்கிறார் (102)

(தொடரும்.)

சிதம்பரம் ராஜா சோமசேகர தீக்ஷிதர்.

---

## ஸங்கிரமணவிஷயத்தில்தீக்ஷிதர் அபிப்பிராயம்என்ன?

பத்திரிகாநேயர்களே!

நம்முடைய பூர்வஜன்ம ஸுகிருத பரிபாகத்தால் நாம் தற்போதிய பரமாசார்யாளையும் அவர்களால் அனுக்கிரகிக்கப்பெற்ற ஆர்யதர்ம பத்திரிகையும் அடைந்து கிருதார்த்தர்களாகிறோமென்பதற்குச் சந்தேகமுண்டோ? இல்லை. ஆகையால் அத்தகைய பத்திரிகையைக்கொண்டு நாம் ஆத்மோஜ்ஜீவனமான விஷயங்களையும், மனது சாந்திபெறக்கூடிய சரிதங்களையும், வெகுநாள் தேடியும், அடையக்கூடாத தர்ம ரஹஸ்யங்களையும், குருமுகமாய் தெரிந்துகொள்ளவேண்டிய சாஸ்திர ஆராய்ச்சிகளையும் ஸுலபமாய்பெற்று ஸுகிருதிகளாகிறோம். இவ்வித பத்திரிகையால் எல்லா வருணத்தாரும் பயன்பெறினும் முக்கியமாய் பிராமணர்கட்கு நிபந்தனைக்கிரந்தங்களாயுள்ளவைகளின் உட்கருத்தை பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களுடன் முடிவான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள கண்ணாடிபோல் ஸித்தாந்தம் ஏற்படுகிறது.

ஆனதுபற்றியே பிரஸ்தாபவிஷயத்தில் நிச்சயம் ஏற்படாமல் சங்கித்துக்கொண்டிருக்கும் நான் தர்மசாஸ்திர பரிசயமுள்ள பண்டிதமணிகளால் சங்கைநீங்கப்பெற்று உண்மைபெறுவேன் எனும் துணிபுடன் எழுத முன்வந்தேன்.

ஓர் தினத்தில் ஒரே தேவதைகளையுடையதும் வெவ்வேறு தேவதைகளையுடையதுமான இரண்டு சிரார்த்தம் நேர்ந்தால்

இரண்டு சிராத்தங்களையும் செய்கிறதா? ஒன்றைமட்டிலும் செய்கிறதா? என்று விசாரம் வந்தால்

नैकश्श्राद्धद्वयं कुर्यात्समानेऽहनि कस्याचित् ।
न यज्ञं न बलिं नैवदेवर्षिपितृतर्पणम् ॥

ஒரு தினத்தில் இரண்டு சிராத்தம்செய்யக்கூடாது. யாகம் பலி, தேவர், ரிஷி, பிதுர்க்கள் இவர்களுக்கு திருப்தி செய்வதில் இவைகளை ஒருநாளில் இரண்டுதரம் செய்யக்கூடாது என்று தக்ஷரும்—

श्राद्धं कृत्वा तु तस्यैवपुनश्श्राद्धं न तद्दिने ।
नैमित्तिकं तु कर्तव्यं निमित्तानुक्रमोदयम् ॥

சிராத்தம் செய்யப்பட்ட ஒருவனுக்கே மறு சிராத்தம் அன்று கூடாது. நைமித்திகமாயிருந்தால் நிமித்தம் உண்டானபடியே செய்யவேண்டும் என்று ஜாபாலியும்,

श्राद्धं कृत्वा पुनश्श्राद्धं न कुर्यादेकवासरे ।
यदि नैमित्तिकं नस्यात् एकोद्दिश्यं भवेद्यदि ॥

நைமித்திகமில்லாததும் ஒரு தேவதையே உத்தேசித்ததுமான ஒரு சிராத்தத்தை ஒருநாளில் மறுதடவை செய்யலாகாது என்று க்ரது மஹர்ஷியும் கூறியிருக்கிறார்கள்.

இதனால் நைமித்திகமில்லாததும், ஒரே தேவதையையுடையதுமான இரண்டு சிராத்தத்தை ஒருநாளில் செய்யக்கூடாது. நைமித்திகமான இரண்டு சிராத்தத்தையும் வெவ்வேறு தேவதையுடைய சிராத்தங்களையும் ஒருநாளில் செய்யலாமென்று ஏற்படுகிறது. முன் கூறியுள்ள ஜாபாலி வசனத்தாலும், க்ரது வசனத்தாலும் நைமித்திகமில்லாததைத் தடுக்கப்பட்டிருக்கிறது. நித்ய நைமித்திகங்களுடைய சேர்க்கையில் நித்யத்தைவிட்டு நைமித்திகத்தைச் செய்யும்படிக்கும், இரண்டு நித்யங்களுடைய சேர்க்கையில் ஒரே தேவதைகளாயிருந்தால் ஒன்றைச்செய்து ஒன்றை விடவேண்டுமென்றும், ஏற்படுகிறது.

இரண்டு நைமித்திகச் சிராத்தங்கள் சேர்ந்தால் இரண்டையும் முறையே நிமித்தங்களின் உத்பத்திப்ரகாரம் செய்யவேணுமென்று ஜாபாலி வசனத்தால் சித்திக்கிறது.

ஸங்கிரமணவிஷயத்தில் தீக்ஷிதர் அபிப்பிராயம் என்ன ௩௧௯

द्वे बहूनि निमित्तानि जायेरन्नेकवासरे ।
नैमित्तिकानि कार्याणि निमित्तोत्पत्त्यनुक्रमात् ॥

இரண்டுக்குமேற்பட்ட எவ்வளவு நிமித்தங்கள் ஸம்பவித்தாலும் நிமித்தங்கள் ஸமான கௌரவமுள்ளதாகையால் அவைகளின் வரிசைவழியே ஒரு தினத்தில் எல்லாவற்றையும் செய்யலாம் என்று காத்யாயனர் கூறினர்.

இதுவும் முன்பின்னாக காலபேதத்தால் நேர்ந்தால் செய்யக் கூடியது. ஒரேகாலத்தில் சம்பவித்துவிட்டால் அவைகளுள் அநியத நிமித்தமானதை (அதாவது கிரஹணம்) அர்த்தோதயம் மஹோதயம்போன்றவை) தர்சம், ஸங்கிரமணம், மன்வாதி, போல் வரும என்கிற கணக்கில்லாததைச் செய்யவேண்டும்.

தர்சமும், ஸங்கிரமணமும் நைமித்திகத்தில் ஸமானமில்லை இவைகள் இரண்டும் ஒருநாளில் ஒரேகாலத்தில் ஒன்றுசேர்ந் தால் எதை அனுஷ்டிக்கிறது? எதைவிடுகிறது? என்றால்தர்சத்தை விட்டு ஸங்கிரமணத்தை அனுஷ்டிக்கவேண்டும். என்று ஏற்படு கிறது. ஏனெனில் தர்ச சிராத்த நிமித்தத்தைக் காட்டிலும் ஸங்கிரமண சிராத்த நிமித்தமானது அநியதமானது. ஒவ்வொரு மாதத்திலும் சந்திரனுடைய கலைகள் குறையும் காரணமான தர்சம் நியதமானது. சூர்யன் ராசியைவிட்டு மறு ராசியில் பிர வேசிக்கும் நிமித்தமான ஸங்கிரமண சிராத்தமானது ராசிகள் தோறும் பிரவேசிப்பது மாதமொருமுறையாயினும் ராசிகள் தனிப்பட்டவைகளாயிருப்பதாலும் ஓர் பெயருள்ள ராசியில் மறுபடியும் ஸங்கிரமிப்பது மறுவருஷமேயானதாலும் ஸங்கிர மணம் அநியதமானது. முன்பு கிரஹணம் அர்த்தோதயம் மஹோதயம் இவைகளை அநியத சப்தத்திற்கு அர்த்தமாகக்கூறி இப்போது ஸங்கிரமணத்தை அநியதம் என்பதால் சந்தேகப்பட வேண்டாம், மாதம் ஒருமுறை வருவதற்கு வருஷம் ஒருமுறை வருவது அநியதம். வருஷம் ஒருமுறை வருவதற்கு எப்பொழுதா வது வரக்கூடியகிரஹணம் அர்த்தோதயம்போன்றவை அநியதம். இம்மாதிரியே நியத அநியதங்களைக்கண்டுகொள்க. இதைப்போ லவே காலத்துக்கும் சிராத்த நிமித்தத்தால் நியத அநியதங்கள் ஏற்படுகிறது. அதாவது தர்சம்பார்வணமாகையால் அதற்குரிய காலமான அபராஹ்ண காலம் நியதம். ஸங்கிரமணத்திற்கோவென்

ருல் ஸங்கிரமணகாலத்திற்கு தக்கவாறு ஒரு பகலிலுள்ள பிராத, ஸங்கவ, மாத்தியாஹ்ந, அபராஹ்ந, ஸாயாஹ்ந, காலங்களில் எவற்றிலாகிலும் ஸம்பவிக்கலாம். ஆகையால் காலத்திற்கும் அநியதம் ஏற்படுகிறது. இவ்விதமாக தர்சத்திற்கும் ஸங்கிரமணத்திற்கும் நியத அநியதங்களின் நிமித்தத்தில் வித்தியாஸம் இருப்பதால் அநியதநிமித்தமான ஸங்கிரமணத்தை அனுஷ்டித்து நியதநிமித்தமான தர்சத்தை விடவேண்டியதுதான். மேலும் ஓரே தினத்தில் அபராஹ்ண காலத்திலேயே தர்ச சங்கிரமணங்கள் ஒன்று சேர்ந்தாலும் ஸங்கிரமணத்திற்கு ஸ்வபாவமாயுள்ள அநியதநிமித்தம் போய்விடாது. அப்பொழுதும்ஸங்கிரமணத்தை அனுஷ்டிக்கவேண்டுமேயொழிய தர்சத்தைச் செய்யக்கூடாது.

(தொடரும்) வி. உமாமகேச்வரசாஸ்திரிகள்.

## மனுஸ்மிருதி அத்தியாயம் 2

# சில வசனங்கள்.

1. விதிப்படி நமஸ்கரிக்கிறவனுக்குத் தக்கப் பிரதி வசனம் சொல்லத் தெரியாத பிராம்மணனை சாஸ்திரப்ரகாரம் நமஸ்கரிக்கக் கூடாது. சூத்திரனுக்கு எப்படியோ அப்படிதான் அவனுக்குச் செய்யவேண்டும்.

2. சந்திக்கும்போது பிராம்மணனுக்கு குசலப்ரச்னமும் க்ஷத்ரியனுக்கு அநாமயம் (வியாதியின்மை) விசாரணையும், வைசியனுக்கு க்ஷேம விசாரணையும் சூத்திரனுக்கு ஆரோக்ய பிரச்னமும் செய்யவேண்டும். இந்நான்கு சப்தங்களுக்கும் அர்த்தம் சமானமென்று சொல்லலாம். பிராமணனுக்கு அத்யயனமும், க்ஷத்ரியனுக்கு சரீர, குடும்ப, ராஜ்யசுகமும், வைச்யனுக்கு க்ருஷி, வியாபாரமுதலியவைவயின் குறைவில்லாமையும், சூத்ரனுக்கு வேலைக்கேற்ப பலமும், இருக்கவேண்டுமென்று கருத்து,

3. யாகம்செய்ய யோக்கியதையுள்ளவர் அவைகளிருக்கின்றனவாவென்று கேட்கவேண்டும், வயதில் சிறுவரானாலும் பெயரைச்சொல்லிப் பேச அழைக்கக்கூடாதவர், தர்மமறிந்தவர், போ: பவான் என்னும் பதங்களை முன்னிட்டுத்தான் அவருடன் பேசவேண்டும்.

4. தனக்கு ஸஹோதரிமுறையில்லாமலும், அன்னியனுக்கு களத்ரமாயுமிருப்பவளை "அம்மா எனதன்பான ஸஹோதரி" என்றுசொல்லி வேண்டும்போது பேசவேண்டும்.

5. தாயாருடன் பிறந்தவர்கள், தகப்பனுடன் பிறந்தவர்கள் தன் பத்நிக்குத் தகப்பன்மார்கள், யாகாதிகள் செய்விக்கிறவர்கள், மற்றும் பெரியவர்கள், தன்னைவிடசிறுவர்களானாலும் "நான்தான்" என்று சொல்லி எழுந்து அவர்களை ஸந்திக்க வேண்டும்.

6. தாயாருடன் பிறந்தவள், மாமன்மனைவி, மாமியார், தகப்பனுடன் பிறந்தவள் இவர்கள் அனைவரும் குருபத்நிக்கு ஸமானம். அவர்கள்குருபத்னியைப்போல் நடத்தப்படவேண்டும்.

7. தகப்பனுடன் பிறந்தவள், தாயுடன், பிறந்தவள், தனக்கு முன் பிறந்த ஸகோதரி இவர்களிடத்தில் தாயிடம்போல் எவனும் நடந்துகொள்ளவேண்டும். தாய் இவர்களைவிட பெரியவள் என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம்.

8. சரியான தனம், உறவு, முதிர்வயது, வேதம் ஸ்மிருதி சொல்லும் கர்மானுஷ்டானம், ஞானம் இவ்வைந்தும் மரியாதைக்குக்காரணம். ஆனால் இவைகளில் பின்சொல்லப்பட்டது முன் சொல்லப்பட்டதைவிட உயர்ந்தது.

9. ஆனால் பிராம்மணன் முதலான மூன்று ஜாதியார்களுள் எவருக்கு மேற்சொல்லிய ஐந்தில் எந்தயோக்யதை ஒன்றுக்கு மேற்கொண்டு மிகுதியாயும் இருக்கிறதோ, அவர், பின்வரும் யோக்கியதை யுள்ளவரைக்காட்டிலும் உயர்ந்த மரியாதைக்குப் பாத்ரமாவார். தனம், உறவு, பெருத்தவர் வயோதிகரைக்காட்டிலும் பெரியவர். தனம் உறவு வயது இம்மூன்றுமுள்ளவர் யாகம்முதலான அனுஷ்டானமுள்ளவரைக் காட்டிலும் பெரியவர், தனம், உறவு, வயது, அனுஷ்டானமுள்ளவர் ஞானமுள்ளவரைக் காட்டிலும் மரியாதைக்குப் பாத்திரமாகார். சூத்ரனே தொண்ணூறுவயதுக்குமேல் எவரையும்விட மரியாதைக்கு யோக்கியன் ஆவான்.

10. வண்டியில் செல்லுகிறவன், தொண்ணூறுவயதுக்கு மேற்பட்டவன், வியாதிக்காரன், மூட்டை சுமக்கிறவன், ஸ்திரீ, வேதாத்யநம் முடித்தவன், ராஜா, விவாஹத்திற்கு புறப்பட்ட மாப்பிள்ளை இவர்களைச் சந்திக்கும்பொழுது வழிவிட்டு விலக வேண்டும். (தொடரும்) R. ஸ்வாமிநாதய்யர்.

# ஸந்தேஹ விளக்கம்.

எமது ஆசிரியரைத்தாக்கியோ? தூக்கியோ எழுதியவைகளுக்கு பதிலெழுதி அருமையான ஆர்யதர்மத்தின் அவகாசத்தை (எமதாசிரியர் விருப்பப்படி) கொள்ளை கொள்ளாமல் உண்மையான ஸந்தேஹத்தை மாத்திரம் விளக்குகிறோம்.

ஸ்ரீ சங்கரோபதேசரத்னம் என்பது ஓர் மாதப்பத்திரிகை அல்ல. அது ஓர் நூல் பல சௌகர்யங்களை உத்தேசித்து மாத சஞ்சிகையாக நடத்திவந்தோம். பிரஜோத்பத்தி ஹூ சித்திரை முதல் நளது வரை மாதாமாதம் தவறாது ஸஞ்சிகை வெளிவந்ததுடன் அடுத்த வருஷத்திற்குறிய அதிகமான ஏழுசஞ்சிகைகளும் சென்றமாதமே வெளிவந்துள. ஸ்ரீ ஜகத்குரு பகவத்பாதாளது ஸ்ரீமுகமும் டிஸ்டிரிக்ட்ஜட்ஜ் ப்ரம்மஸ்ரீ K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையும் சேர்ந்து கடைசி சஞ்சிகையில் வெளிவந்திருக்கின்றன. புத்தகமும் பைண்டாகி இரண்டுரூபாயே விலை வைக்கப்பட்டிருக்கிறது. தபால்சார்ஜ்ஜு 6 அணா.

ஸௌதபுராணிகர் என்பதை பல காரணங்களைக்கொண்டு நிறுத்தி ஆண்டிற்கு இரண்டு மூன்று புராணச்சுருக்கமாக பதிப்பிக்கப்பட்டு பதினெண்புராணங்களையும் வெளியிட உத்தேசித்துளோம். மார்க்கண்டேய புராணம் வெளியாய்விட்டது. தபால் சிலவுடன் 8 அணா அதன் விலை. பத்மபுராணம் அச்சிலிருக்கிறது. எதற்கும் மாதிரிகாபிகள் அனுப்புவது வழக்கமில்லை.

ஸ்ரீ மதாசார்யாள் அனுக்ரஹத்தின்படி பதினெண்புராணங்களை ப்ரவசனம் செய்வதும் தமிழில் எழுதுவதுமே எங்கள் ஆசிரியரது கர்ம. மற்ற விஷயங்கள் எங்களைச் சார்ந்தது.

ல. ராமச்சந்திர சாஸ்திரிகள்.

K. கங்காதரய்யர்.

பிரசுரகர்த்தர்கள்.

154 தம்புசெட்டிதெரு
சென்னை.

## ஸநாதனதர்ம ஸம்வர்த்தினீ ஸபை, பணையப்பட்டி.

ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய சுவாமிகள் அவர்களின் திருவருளை முன்னிட்டு நிகழும் ஆங்கிரஸஹூ சித்திரை-மீ 3உ வெள்ளிக்கிழமை சுக்கிலபக்ஷ நவமியில் பணையப்பட்டி ஸ்ரீமீனாக்ஷிபுரம் அக்கிரஹாரத்தில் ஸ்ரீஸநாதன தர்ம ஸம்வர்த்தினீ ஸபையாரின் ஆதரவில் ஸ்ரீராமநவமிஉத்ஸவம் ஆரம்பமாகி ஷை-மீ 12உ பானுவாரம் அன்று இனிது பூர்த்தியடைந்தது. ஒவ்வொருநாளும் மஹாஜனங்கள் ஒவ்வொருவர் உபயமாக நைவேத்திய வினியோகங்களுடன் நடத்திவைத்தார்கள். உஸ்தவ பத்ததிப்பிரகாரம் பிரதிதினமும் திவ்விய நாமசங்கீர்த்தனங்களுடன் நடந்தேறின. உத்ஸவ பூர்த்திதினமன்று சுமார் 150-பேர்கள் வரை பிராம்மண ஸந்தர்ப்பணையும் நடந்தது. வேதபாராயணம் நடந்தது. உபக்கிராமவாஸிகள் கூழிபுரை நச்சாந்துப்பட்டி மஹாஜனங்களும் வந்திருந்து பக்திசிரத்தையுடன் மிகவும் விமரிசையாய் உத்ஸவத்தை நடத்திவைத்தார்கள். அன்றிரவு ஸ்ரீராமபிரான் பட்டாபிஷேகப் படத்தை அலங்காரம்செய்து பஜனை, மேள வாத்தியம், பாணவேடிக்கை முதலிய விநோதக்காக்ஷியுடன் கிராமப்பிரதக்ஷிணமாய் எழுந்தருளச் செய்துவைத்தார்கள். உத்ஸவம் மங்களமாய்ப் பூர்த்தியடைந்தது. சுபம்.

வெங்கடேசய்யர்,
காரியதர்சி.

## ஆங்கிரஸ வருஷப்பிறப்பு.

நாளது சித்திரை விஷு புண்ணிய காலத்தன்று மாலை 3-மணிக்கு தஞ்சை பிராம்மணர்ஸநாதனதர்ம ஸம்ரக்ஷணஸபையார் கூடி பஞ்சாங்க படனமும் பானகபூஜையும் நடத்தினார்கள்.

பானகபூஜைமுடிந்தபிறகு ஷை ஸபை அத்யக்ஷர் ப்ரும்மஸ்ரீ தி. கோதண்டராமய்யங்கார் அவர்களும் ஸபை காரியதர்சியும் ஷை ஸபையின் ஆதரவில் நடத்தப்படும், 'ஆர்யமதபாடசாலை'யை அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும், இந்த பாடசாலை நிரந்தரமாய் நடக்கும்படி ஒவ்வொரு பிராம்மணரும் தன்னாலியன்ற பொருளுதவி செய்யவேண்டுமென்றும் தஞ்சைவாசிகளை பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள்.

அதன்மேல் தேவங்குடி ப்ரும்மஸ்ரீ தியாகராஜ சாஸ்திரிகளவர்களால் 'ஸ்ரீமத் ராமாயண தத்வ'த்தைப்பற்றி உபன்யாஸம் செய்யப்பட்டது. ஸ்ரீமத் ராமாயணத்தை நன்ருய் ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு சுருதிஸ்மிருதிகளினல் பிரதிபாதிக்கப்படும்சகல முக்கிய தர்மங்களும் அந்த கிரந்தமொன்றிலிருந்தே புலப்படுமென்றும் அது ஸநாதன தர்ம களஞ்சியமென்றும் உபன்யசித்தார்கள்.

தஞ்சாவூர் ஆங்கிரஸ சித்திரை 10௳ } க. லெ. லக்ஷ்மணசாஸ்த்ரிகள், கார்யதர்சி.

---

## ஆங்கிரஸ ஸூ த்திய உபாகர்மவிஷயம்

ஏற்கனவே ப்ரஜோத்பத்தி ஸூ பங்குனிமீ 26௳ (7-4-32) இல் ஷிவிஷயமாய் வெளியிடப்பட்டிருக்கிற பஞ்சாங்க வித்யா சங்கஜோடு அடியில்கண்டதையும் சேர்த்துக்கொள்ளவும்.

புதுக்கோட்டைப் பஞ்சாங்கம் ஆடிமீ 2௳ போதாயன யஜுர் பிரதம உபாகர்ம

ஆடிமீ 23௳ ருக் உபாகர்ம
ஆவணிமீ 1௳ யஜுர்உபாகர்ம
ஆவணிமீ 30௳ ஆபஸ்தம்பயஜுர் பிரதம உபாகர்ம.

க. லெ. லக்ஷ்மணசாஸ்த்ரிகள், கார்யதர்சி.

---

# சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

## பீமன்.

சந்த்ரவம்சத்தில் பிறந்த பாண்டுவின் குமாரர் இவர். இவரது தாய் குந்தி. மூற்றவன் தர்மராஜன். இவன் இளையவன் அர்ஜுனன், நகுலஸகாதேவர்கள். பீமன் வாயுவினது அருளால் பிறந்தவன். இவன் பிறந்த காட்டில் ஓர் புலி கர்ஜித்தது. அதைக் கேட்டு பயந்தாள் குந்தி. இக்குழந்தையை எடுத்துக் கொண்டு மலைமேலேறினுள். அப்புலியைப் பாண்டு கொன்ருர். அதன் கர்ஜனையைக் கேட்டு குந்தி நடுங்கினுள்.

அவள் கையிலிருந்த பீமன் கீழே விழுந்தான். ஐயோ! குழந்தையைப் போட்டுவிட்டேனே! என்று அழுதாள். கீழே ஓடிவந்து பார்த்தாள். பாண்டுவும் குந்தியும் குழந்தையை எடுத்தார்கள். நல்ல காலமாக குழந்தைக்கு ஆபத்தில்லை, அவன் விழுந்த பாறை தூள்தூளாக ஆனது. இதைக்கண்டு எல்லோரும் ஆச்சர்யப்பட்டனர். குழந்தை வளர்ந்து பெரியவனானான். துரோணரிடம் வில்வித்யை கற்றான்.

இவனது பலத்தைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். இவனைக்கண்டு துரியோதனன் பொறாமை கொண்டான். குந்தியோடு பாண்டவர்களைக் கொல்ல நினைத்தான். அரக்குமாளிகையைக் கட்டி அங்கே வஸிக்கும்படி செய்தான். இவன் சூதை அறிந்த விதுரர் ரஹஸ்யமாக பாண்டவருக்கு விஷயத்தைச்சொன்னார். இவர்களே அரக்குமாளிகைக்கு தீவைத்துச் சென்றனர். தற்செயலாக ஆறுபேர் அதில் இறந்தனர்.

துர்யோதனாதிகள் பாண்டவர் இறந்தனர் என்றே நினைத்தனர். தர்மத்தைத் தழுவியவர் அழிவாரா? சுரங்கவழியாக இவர்கள் வெளியில் சென்றனர். ஸஹோதரர்களையும் தாயையும் பீமன் தோளில் தூக்கிச்சென்றான். காட்டில் இவர்களைப் படுக்கவைத்தான். துஷ்டமிருகங்கள் கிட்டே வராதபடி காவல் காத்தான். என்ன ஸஹோதர வாஞ்சை? எவ்வளவு பரோபகார சிந்தை? பார்த்தீர்களா?

இடும்பன் என்று ஓர் ராக்ஷஸன். அவன் மனுஷ்யவாஸனை அடிப்பதை அறிந்தான். ஸஹோதரியான இடிம்பியை அனுப்பி அவர்களைக் கொண்டுவரச் சொன்னான், மற்றவர் தூங்கிக்கொண்டிருக்க பீமன் மாத்ரம் விழித்துக் கொண்டிருந்தான். அவனழகைப் பார்த்து இடும்பி ஆசைகொண்டாள். இதற்குள் இடும்பன் கோபத்தோடு ஓடிவந்தான். அவனைப் பீமன் கொன்றான்.

தர்மர் உத்திரவுப்படி இடும்பியை பீமன் மணந்தான். கடோத்கசன் என்றோர் குழந்தைஅவளுக்குப்பிறந்தது. கூப்பிட்ட போது வருவதாகச் சொல்லி இடும்பியும் கடோத்கசனும் சென்றனர். பாண்டவர் ஐவரும் தாயுடன் வியாஸர் சொன்னபடி

ஏகசக்ரநகரம் சென்றனர் அங்கு பிக்ஷை எடுத்து ஜீவித்து வந்தனர். இவர்களது குணத்தைக்கண்டு எல்லோரும் இவர்களிடம் அன்புகொண்டனர்.

அவ்வூரில் பகன் என்றொரு அஸுரனிருந்தான். அவன் ஊரில் புகுந்து எல்லோரையும் கொன்று வந்தான். ஊரார் அவனுக்கு ஓர் வ்யவஸ்தை ஏற்படுத்தினர்கள். ப்ரதிதினம் ஓர் வண்டிநிறைய அன்னம், ஓர் பிள்ளை இதை அவனுக்கு ஒவ்வொரு வீட்டுக்காரராக முறை போட்டுக் கொடுக்க வேண்டும். குந்தி தங்கிருந்த வீட்டிற்கு அந்த முறை வந்தது.

அவ்வீட்டிற்கு ஒரே பிள்ளை தானிருந்தது. அதைக்கொடுக்க மனமில்லாமல் அவன்பெற்றோர் அழுதனர். இதைக் கேட்டுகுந்தி அவரருகே ஓடினள். அம்மா அம்மா அழாதே! எனக்கு ஐந்து பிள்ளைகளிருக்கிறார்கள். இதில் ஒருவனை அனுப்புகிறேன் என்றாள். தன் பிள்ளையைக் கொடுத்தாவது ஊர் பிள்ளையைக் காக்க வந்தாள் குந்தி. இவள் குணத்தை எல்லோரும் மெச்சினர்கள்.

அம்மா இந்தூருக்கு விருந்தாடியாக வந்த உங்களைப் பலி கொடுப்பது நியாயமா? என் பாபம்! எங்கள் குழந்தயைப் பலி கொடுக்கிறோம் என்றாள். அதைத்தடுத்து குந்தி பீமனை அனுப்பினள். தர்மர் முதலியவர்களுக்கு இதில் இஷ்டமில்லை. ஆனாலும் அன்னையின் ஆக்ஞை அல்லவா? வாயைத் திறக்கவில்லை பேசாம விருந்துவிட்டார்கள்.

சிறுகுழந்தை தான் பீமன். இருந்தாலும் தாயை வணங்கினன். தமயனை நமஸ்கரித்தான். அச்சமில்லாமல் வண்டிமேலேறினன். வேகமாக மாட்டை ஓட்டினன். வழியில் மாட்டை அவிழ்த்து மேயவிட்டான். வண்டி சாத்தையும் சாப்பிட ஆரம்பித்தான். பகாசுரன் இதைக்கண்டு ஓடிவந்தான். பீமனோடு சண்டையிட்டான். பீமன் பகாசுரனைக் கொன்றான்.

இவ்வளவு பலமிருந்தும் பீமன் தாய் சொல்படி நடந்தான். லோகோபகாரம் செய்தான். அதற்காகவே நமக்கு ஈசன் உடல் அளித்தார்.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவசர்மா.

# வாரவிருத்தாந்தம்.

**வால்மீகி நினைவு.** 15உ சென்னை ஸம்ஸ்கிருத ஸபையார் ஆதிகவியான பகவான் வால்மீகியை உலகம் மறக்கவில்லை என்று காட்ட ஸ்ரீ ராமநவமி யன்று ஓர் ஸபை கூடினர். ஸ்ரீராமாயண விஷயமாக பல உபன்யாஸங்கள் நடந்தன. ஸ்ரீ மஹாபாரதத்தைத் தமிழில் தர்ஜம் செய்த ஸ்ரீமான் ராமாநுஜாசார்ய ஸ்வாமிகளுக்கு அபிநந்தனமளித்து "பாஷாபாரத துரந்தரர்" என்ற பட்டமுமளித்தனர். லோகோபகாரமான தர்மகார்யத்தி லீடுபட்டவரைச் சந்தோஷப்படுத்த வேண்டியது அவச்யமான கார்யமே.

**ஸ்ரீராமநவமி.** ஷை தினத்தை முன்னிட்டு கர்ப்போத்ஸவமாகவும் ஜன்மோத்ஸவமாகவும் வைதிகமாகவும் லௌகிகமாகவும் பல இடங்களில் கொண்டாட்டம் நடைபெற்றன. சென்னையிலுள்ள மார்வாரிகள் இப்பத்து தினங்களிலும் அகண்டபஜனையாக ஸ்ரீ ராமநாமாவை உச்சரித்து வந்தனர். 3 கோடி ராமநாம ஜபம் பலர் மூலமாகச் செய்தனர். யஜ்ஞேஷு நாம யஜ்ஞஸ்யாம் என்று கீதாசார்யாள் சொற்படி பகவன்நாமாவை ஜபிப்பதும் வைதிக முறையில் அவரை பூஜிப்பதும் சிறந்த புண்யம். கேவல பாட்டுக்கச்சேரி முதலியவை நடத்துவோர் இனியாவது அதை விடாமலே பகவன்நாமாவையும் ஜபிப்பாராக,

**வேதாந்த தத்வம்.** 12 உ சேலத்தில் ஷை விஷயமாக ஸ்ரீமான் உ. வே. என். ஸி. ஸ்ரீநிவாஸாசார்யார் ஓர் உபன்யாஸம் செய்தார். இவர் ஹிந்துமத தர்மஸ்தாபன போர்டின் அங்கத்தினர். கல்வி கேள்வி ஆசாரங்களில் கரைகண்டவர். பரம ஆஸ்திகர். இத்தகையோர் இது போன்ற ஸ்தாபனங்களிலிருத்தல் அத்யாவச்யம்.

**ஸ்ரீ கீதோபன்யாஸம்.** 14 உ குத்தாலம் க்ஷேத்ரபாலபுரத்தில் ஸ்ரீமான் காளி வங்கிபுரம் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி 22 உபன்யாஸமாக கீதையைச் சொல்லி முடித்தார்.

ச்ரோதாக்கள் உபன்யாஸகருக்குத் தக்கபடி ஸம்பாவனை செயத னர். ஆஸ்திகராக உள்ள ஒவ்வொருவரும் குறைந்தபக்ஷம் ஸ்ரீ கீதையையேனும் கேட்பது அவசியம்.

**ஸஹஸ்ரகலசாபிஷேகம்.** 15 உ மதுராந்தகத்தில் ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி ஸபையார் ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்திக்கு ஷை அபிஷேகம் செய்து வைத்த உடன் 300 ரூ பொறுமான முள்ள ஓர் பதக்கமும் செய்து ஸ்ரீ ஸீதாப்பிராட்டிக்கு அர்ப்ப ணம் செய்தனர். அடுத்த ஆண்டுக்கு பெரிய வெள்ளி மணியும் ஸ்ரீ உடையவருக்கு கல்லிழைத்தத் திருமண்காப்பு செய்வ தாகத் தீர்மானித்திருக்கின்றனர். பகவத்கைங்கர்யத்லீ திடுபட்ட இச்சபை வாழ்க.

**ஸ்வர்ணவியாநம்.** 16 உ நாங்குநேரியிலுள்ள ஸ்ரீமஹா விஷ்ணு ஆலயத்திற்கு ஸ்ரீ வாநமாமலை மடத்தைச் சார்ந்தவர்கள் 30000 ரூ செலவு செய்து ஓர் ஸ்வர்ணவிமாநம் செய்தளித்தனர். அன்று அவ்விமானத்தில் பகவான் எழுந்தருளினர். இவ்வுத்தம கைங்கர்யத்துக்கு ஈடு வேறொன்றுண்டோ? தார்மிகர் ஸுகமடைக.

**நிரூடபசுபந்தம்.** 17 உ லால்குடியில் ஸ்ரீ சங்கரமடத் தில்பிரும்ம்ஸ்ரீ கிருஷ்ணதீக்ஷிதர்வாள் ஷைபசுபந்தம் செய்தார், பலபிராமணர்களுக்கு ஸமாராதனை செய்யப்பட்டது. ஏராளமாக ஜநங்கள் வந்து தர்சித்தனர். ச்ரௌதகர்மா மிக அபூர்வமாகிவிட் டது. இச்சமயத்தில் யக்ஞம் செய்வோர் தங்களுக்குப் புண்யம் தேடிக்கொள்வது மாத்ரமல்ல. உலகிற்கே பேருதவி புரிகின்றனர்.

**இந்தியா தர்மபூமி.** 20 உ பெங்களூரில் 15 வருஷமாக உலகயாத்ரை செய்துவரும் ஓர் ஜெர்மினியர் உபன்யாஸம் செய் தார். ஸகலதேசங்களிலும் இந்தியாவைப் போல் பரோபகாரம், அதிதிபூஜை, தைவபக்தி முதலிய தர்மம் நிறைந்த வேறு நாடு கிடையாதென்றார். தர்மபூமியைப் பாழாக்க நாஸ்திகமும் நாக ரீகமும் நர்த்தனம் செய்கிறது. ஆஸ்திகர் உறங்கலாமா?

ஸ்ரீவத்ஸ வே, ஸோமதேவசர்மா